யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 21 [07-10-1993] வியாழக்கிழமை ஓசை 231

## பல்கலைக்கழக அனுமதிக்கு தாய்மொழி கட்டாய பாடம்

பல்கலைக் கழக பிரவேசத்திற்கு தாய் மொழி தேர்ச்சி அவசியம் அதற்கேற்ப க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தாய்மொழி கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகப்பிரவேச பாடங்களில் ஒன்றாக தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கல்வி உயர் கல்வி கலாசார அமைச்சர் லொக்கு பண்டார தெரிவித்துள்ளார். தற்போது பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு நான்கு பாடங்கள் தேவைப்படுகின்றன இவற்றை மூன்றாகக் குறைத்துவிட்டு நான்காவது பாடத்தை தாய்மொழி தேர்ச்சியாக மாற்ற தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# அறிவுச் சுடரை அணையாது பாதுகாத்து விடுதலைக்கு உறுதுணையாய் நில்லுங்கள்

## தேசியத் தலைவர் பிரபாகரன் ஆசிரியர் சமூகத்திடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**சகல நெருக்கடிகளுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுத்து எமது தேசத்தின் அறிவுச் சுடரான கல்வியை அணைந்துவிடாது பாதுகாப்பது ஆசிரிய சமூகத்தின் தலையாய பொறுப்பாகும். அத்துடன் எமது சமுதாயத்தின் விடிவை இலட்சியமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உறுதுணையாக நிற்பதும் கல்விமான்களின் கடமையாகும். இவ்வாறு தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் உலக ஆசிரியர் தினத்தை யொட்டி விடுத்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

அச்செய்தியின் முழு விபரமும் வருமாறு;

மனித சமூகங்களின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வளமான வாழ்வுக்கும் ஆதாரமாக அமைவது கல்வி. அந்தக் கல்வியை இளஞ் சமுதாயத்துக்கு ஊட்டுகின்ற உன்னத பணியை ஆசிரியர் சமூகம் மேற்கொண்டு வருகிறது. சமூகத்தின் சிற்பிகளாக சமூக மேம்பாட்டுக்கு உழைத்துவரும் ஆசிரியப் பெருந்தகைகள் பாராட்டுக்குரியவர்கள்.


எமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியைச் சீர்குலைத்து, எமது தேசிய வாழ்வையும் வளத்தையும் சீரழித்து, எமது நிலத்தை ஆக்கிரமித்து, எம்மை இன ரீதியாக அழித்தொழிக்க எமது எதிரியானவன் இன்று பெரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறான். இந்த இக்கட்டான போர்க் காலச் சூழலில் ஆசிரிய சமூகத்தின் பொறுப்பும் பங்கும் முக்கியமானது. சகல நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து எமது தேசத்தின் அறிவுச் சுடரான கல்வியை அணைந்துவிடாது பாதுகாப்பது ஆசிரிய சமூகத்தின் தலையாய பொறுப்பாகும். அத்துடன், எமது சமுதாயத்தின் விடிவை இலட்சியமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உறுதுணையாக நிற்பதும் கல்விமான்களின் கடமையாகும்.

எத்தனையோ இடர்களையும் தடைகளையும் எதிர்கொண்டு இந்தத் தேசியப் பணியில் எமது ஆசிரியர்கள் மிகவும் பொறுப்புணர்வுடனும் தேசியப் பற்றுணர்வுடனும் துணிவுடனும் செயலாற்றி வருவது கண்டு நான் பெருமை கொள்கிறேன். இந்நிலையில் எமது சமுதாய மேம்பாட்டின் ஏணிப்படிகளாகத் திகழும் இப் பெருந்

மதிப்பளிப்பது எமது கடமையாகும்.

உலகெங்கும் ஆசிரியர் சமூகத்தைப் பாராட்டும் நாளாக, அக்டோபர் 6 ஆம் நாள் உலக ஆசிரியர் நாளாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. உலக சமுதாயம் நன்றியுணர்வுடன் கொண்டாடிவரும் இந் நன்னாளில் நாமும் எமது ஆசிரியர் சமூகத்தைப் பாராட்டிக் கௌரவிப்பது சாலச் சிறந்ததாகும்.

தமிழீழத்தின் கல்வி நிலையை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வரும் தமிழீழக்



### வயோதிப பெண் பலியானார்

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் கிளாலிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் வசித்து வந்த புங்குடுதீவைச் சேர்ந்த வயோதிபபெண்மணி ஒருவர் உயிரிழந்துள்ளார். குடியிருப்பில் தங்கியிருந்த ச. சின்னம்மா (வயது 73) என்ற இப் பெண்மணி குடியிருப்பின் மீது நடாத்தப்பட்ட எறிகணை

(4ஆம் பக்கம் பார்க்க)

### பளை பாடசாலைகள் திங்கள் ஆரம்பமாகும்

வழமை போல எதிர்வரும் திங்கட்கிழமை பளைக் கொத்தணி பாடசாலைகள் ஆரம்பமாகும் என பளைகொத்தணி அதிபர் அறிவித்துள்ளார்.

## சைவ உணவு விடுதியில் 38 தமிழ் இளைஞர் கைது

[கொழும்பு]

தாகக் கொழும்புச் செய்திகள்

**வுச் சுடரான கல்வியை அணைந்துவிடாது பாதுகாப்பது ஆசிரிய சமூகத்தின் தலையாய பொறுப்பாகும். அத்துடன் எமது சமுதாயத்தின் விடிவை இலட்சியமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உறுதுணையாக நிற்பதும் கல்விமான்களின் கடமையாகும். இவ்வாறு தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் உலக ஆசிரியர் தினத்தை யொட்டி விடுத்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

அச்செய்தியின் முழு விபரமும் வருமாறு;

மனித சமூகங்களின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வளமான வாழ்வுக்கும் ஆதாரமாக அமைவது கல்வி. அந்தக் கல்வியை இளஞ் சமுதாயத்துக்கு ஊட்டுகின்ற உன்னத பணியை ஆசிரியர் சமூகம் மேற்கொண்டு வருகிறது. சமூகத்தின் சிற்பிகளாக சமூக மேம்பாட்டுக்கு உழைத்துவரும் ஆசிரியப் பெருந்தகைகள் பாராட்டுக்குரியவர்கள்.

எமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியைச் சீர்குலைத்து, எமது தேசிய வாழ்வையும் வளத்தையும் சீரழித்து, எமது நிலத்தை ஆக்கிரமித்து, எம்மை இன ரீதியாக அழித்தொழிக்க எமது எதிரியானவன் இன்று பெரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறான். இந்த இக்கட்டான போர்க் காலச் சூழலில் ஆசிரிய சமூகத்தின் பொறுப்பும் பங்கும் முக்கியமானது. சகல நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து எமது தேசத்தின் அறிவுச் சுடரான கல்வியை அணைந்துவிடாது பாதுகாப்பது ஆசிரிய சமூகத்தின் தலையாய பொறுப்பாகும். அத்துடன், எமது சமுதாயத்தின் விடிவை இலட்சியமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உறுதுணையாக நிற்பதும் கல்விமான்களின் கடமையாகும்.

எத்தனையோ இடர்களையும் தடைகளையும் எதிர்கொண்டு இந்தத் தேசியப் பணியில் எமது ஆசிரியர்கள் மிகவும் பொறுப்புணர்வுடனும் தேசியப் பற்றுணர்வுடனும் துணிவுடனும் செயலாற்றி வருவது கண்டு நான் பெருமை கொள்கிறேன். இந்நிலையில் எமது சமுதாய மேம்பாட்டின் ஏணிப்படிகளாகத் திகழும் இப் பெருந்தகைகளை ஏற்றிப்போற்றி மதிப்பளிப்பது எமது கடமையாகும்.

உலகெங்கும் ஆசிரியர் சமூகத்தைப் பாராட்டும் நாளாக, அக்டோபர் 6 ஆம் நாள் உலக ஆசிரியர் நாளாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. உலக சமுதாயம் நன்றியுணர்வுடன் கொண்டாடிவரும் இந் நன்னாளில் நாமும் எமது ஆசிரியர் சமூகத்தைப் பாராட்டிக் கௌரவிப்பது சாலச் சிறந்ததாகும்.

தமிழீழத்தின் கல்வி நிலையை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வரும் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் தமிழீழத்தில் உலக ஆசிரியர் நாளைச் சிறப்பாகக்

(4ஆம் பக்கம் பார்க்க)



பில் தங்கியிருந்த ச. சின்னம்மா (வயது 73) என்ற இப் பெண்மணி குடியிருப்பின் மீது நடாத்தப்பட்ட எறிகணை

(4ஆம் பக்கம் பார்க்க)

## பளை பாடசாலைகள் திங்கள் ஆரம்பமாகும்

வழமை போல எதிர்வரும் திங்கட்கிழமை பளைக் கொத்தணி பாடசாலைகள் ஆரம்பமாகும் என பளைகொத்தணி அதிபர் அறிவித்துள்ளார்.

# சைவ உணவு விடுதியில் 38 தமிழ் இளைஞர் கைது

[கொழும்பு]

கொழும்பில் மீண்டும் தமிழ் இளைஞர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில காலங்களாக தீவிரமாக தமிழ் இளைஞர்களும்யுவதிகளும் சிறிலங்காப் பொலிசாரால் பெருமளவில் கைது செய்யப்பட்டு வந்தமை தெரிந்ததே.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புறக்கோட்டைப்பகுதியில் உள்ள சைவ உணவு கடையொன்றில் வைத்து வடபகுதி தமிழ் இளைஞர்கள் 38பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவ தினம்மேற்படி சைவ உணவுக்கடைக்குள் புகுந்த பொலிசார் அங்கிருந்த 38 பேரையும் கைது செய்து கொண்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# போராளிகளின் அர்ப்பணிப்பு எதிரியை சிதறடித்தது

## 'விளக்கு' வெளியீட்டில் தமிழ்ச்செல்வன்

(யாழ்ப்பாணம்)

ஒரு நெருக்கடியான ஆபத்தான காலகட்டத்தில் இன்று ஆசிரியர் தினத்தை கொண்டாடுகின்றோம். இதனை நாம் கொண்டாடும் நேரத்தில் எதிரி இங்கு ஓர் யுத்தத்தை பிரகடனப்படுத்தியுள்ளான். குடாநாட்டை முற்றுகையிட்டு எமது இனத்தை அழித்து ஒழிக்க எதிரி மேற்கொண்ட யுத்தத்தை எமது 80க்கும் மேற்பட்ட சகோதர, சகோதரிகள் தம்மை அர்ப்பணித்து அவனது நோக்கை சிதறடித்துள்ளனர். அம் மாவீரர்களின் தியாகமே இவ்விழாவை இவ்வளவிற்கு நடத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியது. இவ்வாறு நேற்று யாழ். இந்துக் கல்லூரியில் விளக்கு எனும் மாத சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் சிறப்புரையாற்றிய அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்குறிப்பிட்டார்.

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையின் விளக்கு மாத சஞ்சிகை நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் பஞ்சலிங்கம் தலைமையில் வெளியிடப்பட்டது. இதில் தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ கல்வி கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஏற்றினார். மங்கள விளக்கை தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், வடமாநில கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியத் தலைவர் பிரபாகரன் ஆசிரிய தினத்தையொட்டி விடுத்த ஆசிச்செய்தியை அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் வாசித்தார். தொடர்ந்து அங்கு அவர் ஆசியுரை வழங்கினார். தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை தலைவர் அருட்திரு பிரான்சிஸ் யோசப் அடிகளார் விளக்கு இதழை வெளியிட்டு வைத்தார்.

இந் நிகழ்வில் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தமது உரையில் மேலும்;

''இன்று நாம் எதற்கும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கோட்ட ரீதியாக ஆசிரியர் தின விழா

[நமது நிருபர்]

யாழ். குடாநாட்டில் உலக ஆசிரியர் தின விழா கோட்ட ரீதியாக வெகு விமரிசையாக நேற்று நடைபெற்றது.

நேற்று மாலை 2.30 மணியளவில் மாணவர்களின் பான்ட்வாத்திய இசைமுழங்க ஆசிரியர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இதை தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியும் கோட்டக்கொடியும் ஏற்றிவைக்கப்பட்டன அனைத்துக் கோட்டங்களிலும் அந்தந்தக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பிரதிநிதிகள், கோட்ட அரசியல் துறைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை ரீதியாக நேற்று ஆசிரியர்கள் கௌரவிப்பு

[நமது நிருபர்]

யாழ். மாவட்டத்தில் உள்ள 450ற்குமேற்பட்டபாடசாலைகளில் உலக ஆசிரியர் தினம் நேற்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இவை காலையில் பாடசாலைகள் ரீதியாகவும் மாலையில் கோட்ட ரீதியாகவும் சிறப்புற நடைபெற்றன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் இணைந்து ஆசிரியர்களைக் கௌரவித்தனர்.

நேற்றுக்காலை அனைத்துப் பாடசாலைகளிலும் ஆசிரியர்களைக் கௌரவித்து கவிதைகளும், பொன்மொழிகளும் எழுதப்பட்ட பதாகைகள் பாடசாலை வாயில்களில் கட்டப்பட்டு சிறப்புற அலங்கரிக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பதுங்கியிருந்து தாக்கியதில் இரு ஆதரவாளர் வீரச்சாவு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் விலக்கந்தை வங்கலால் என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகளின் முழுநேர ஆதரவாளர் இருவர் வீரச்சாவடைந்தனர்.

கடந்த மாதம் 26-ம் திகதி இரவு 8-00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மூதுரைச் சேர்ந்த இராசதுரை அற்புதராஜா (ராஜா), கட்டைபறிச்சான் மூதுரைச் சேர்ந்த இராசரட்ணம் ஸ்ரீஸ்கந்தராசா (குஞ்சு) ஆகிய இருவருமே வீரச்சாவு அடைந்தவர்களாவர். இவ் இருவருக்கும் தமிழீழவிடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வடபகுதி படை நடவடிக்கை வீணான உயிரிழப்பே

### சு. க. எம். பி தெரிவிப்பு

(கொழும்பு)

''கடந்தவாரம் வடக்கிலுள்ள அரச படைகள் தமது நிலைகளிலிருந்து 12 கிலோ மீற்றர் முன்னேறியதாக கூறப்பட்டது. பின்னர் படைகள் மீண்டும் அவர்களது பழைய நிலைக்கு திரும்பி சென்றுவிட்டதாக கூறப்பட்டது. அவ்வாறானால் மொத்தத்தில் நீங்கள் உண்மையாக முன்னேறிச் செல்லவில்லை என்பதையே இந்நடவடிக்கைகள் காட்டுகின்றன இந் நடவடிக்கையினால் வீணான உயிரிழப்புகளே ஏற்பட்டன'' இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணியை சேர்ந்த பந்துல குணவர்தனா நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரி

(4ஆம் பக்கம் பார்க்க)

# கோபாலசாமியை நீக்குவதற்கு கட்சிக்குள் கடும் எதிர்ப்பு

## மாவட்ட செயலர் கூட்டம் ஒத்திவைப்பு

(சென்னை)

தி. மு. க விலிருந்து வை. கோபாலசாமியை நீக்குவது குறித்து ஆராய நேற்று கூடவிருந்த கட்சி மாவட்ட செயலர்களின் கூட்டம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது. கோபாலசாமியை நீக்க கட்சி மாவட்ட செயலர்களில் 9 பேர் எதிர்ப்புக் காட்டியமையே இதற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது. இதனால் வை. கோபாலசாமியை கட்சியிலிருந்து அகற்றிவிட்டு தி. மு. க, காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச்சேர எடுத்த திட்டம் தோல்வியடைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

கோபாலசாமியை நீக்க தி. மு. க முடிவு செய்து விட்டதாக வெளியான செய்தி கேட்டு மதுரையில் பன்னீர் செல்வம் (35) என்பவர் தீக்குளித்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இதே வேளை கோபால்சாமியை எதிர்ப்பவரும் முன்னாள் எம். ஏல். ஏயுமான சுப்பிரமணியம் என்பவரின் கார் நேற்று தீக்கிரையாக்கப்பட்டது.

கோபாலசாமிநீக்கப்பட்டால் தி. மு. க இரண்டாக பிரியும் என அண்மையில் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட நாஞ்சில் மனோகரன் எச்சரித்துள்ளார். கோபாலசாமியை வெளியேற்றுவதை எப்படி தடுத்து நிறுத்துவது என்பது குறித்து நேற்று கோபாலசாமியின் ஆதரவாளர்கள் ஆராய்ந்தனர்.

## அடுத்த வாரம் 'வாதுவ' வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான ஒரு தொகுதி உணவு மற்றும் பொருள்களுடன் ''வாதுவ'' கப்பல் அடுத்த கிழமை பருத்தித்துறையை வந்தடையவுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கப்பல் கொழும்பு துறைமுகத்தில் பொருள்களை ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது எனவும் அக் கப்பலில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தில் ஷெல்வீச்சு மூன்று பெண்கள் காயம்

[மல்லாகம்]

பலாலி சிறிலங்கா இராணுவத்தினர் நள்ளிரவு வேளை மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களால் மூன்று பேர் காயமடைந்தனர்.

பலாலி படைமுகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் ஏவியஎறிகணைகள்சுன்னாகம் மயிலணி வடக்கு முருகமூர்த்தி கோவிலருகில் வீழ்ந்து வெடித்தன. இதனால் அதே இடத்தைச் சேர்ந்தவர்களான ஜெயந்தி கணேஸ் [வயது24] பவானி முருகேசு [வயது14], மோகனரூபராணி புவனேந்திரன் [வயது28] ஆகியோர் காயமடைந்தனர்.

எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கத் தொடங்கியதும் வீட்டிற்குள் இருந்து வெளியே பாதுகாப்புதேடி ஓடியபோதே இவர்கள் மூவரும் காயமடைந்தனர்.

இவர்கள் மூவரும் சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதே வேளையில் இவ் எறிகணை வீச்சால் மயிலணிப் பகுதியில் இரு வீடுகள் சேதமடைந்தன.

[9]

## வரி விளம்பரம்

### லலிதா சகஸ்ரநாமம்

லலிதா சகஸ்ர நாமம் (கிரந்தலிபி) வெளிவந்துள்ளது. சுப்ரமண்ய சகஸ்ர நாமமும் உண்டு. தேவையானோர் தொடர்பு கொள்க. சோ. நிர்மலேஸ்வரசர்மா முருகமூர்த்தி கோவில், நவாலி. (சி-7545)

### ஆண்டு 4 பரீட்சை

ஆண்டு 4 ற்கு மாதந்தோறும் நடாத்தப்படும் தொடர் பரீட்சை 12-வது 10-10-93 ஞாயிறு 8.00, 11.00 மணி நேரங்களில் நடைபெறும். வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். தூரஇட மாணவருக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (6222)

### பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

யாழ் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் புற்றளை சனசமூக நிலையம், புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தானம் என்பவற்றினால் நடாத்தப்படும் தென் புலோலி சித்தி விநாயகர் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி பாலர் பாடசாலை பெற்றார் சங்கத் தலைவர் திரு. சு. திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றது. இவ் விளையாட்டுப் போட்டியிலே வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் திரு. ச. செவ்வந்திநாதர் விசேட விருந்தினராகவும் கலந்து கொண்டனர். திருமதி செல்வநாயகி செல்லத்துரை பரிசில்களை வழங்கினார். திரு. க. முருகையா நன்றியுரை வழங்கினார். [25]

### அரையாண்டு பதவி உயர்வுப் பரீட்சை

மதுவரித்திணைக்களப் பரிசோதகர்களுக்கான அரையாண்டு பதவி உயர்வுப் பரீட்சை 1993 ஆம் ஆண்டு எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்குகொழும்பு மது வரித்திணைக்கள ஆணையாளர் பணிமனையில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்

# ராணுவத்தால் கொல்லப்பட்டவர்க்கு நஷ்ட ஈடாவது வழங்கவும்

## பாராளுமன்ற உறுப்பினர் கோரிக்கை

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 158 பேரின் குடும்பங்களுக்கும் போதிய நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக மனித உரிமைகள் பணிக்குழுவின் இரண்டாவது ஆண்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களின் அடிப்படையில் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ள அவர் இப்படுகொலைகள் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதால் இவர்களுக்கு மரண அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படல் வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

1990 செப்டெம்பர் 5ஆம் திகதி காலை இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்ட 158 பேரில் ஒருவரைக் கூட தம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற இறுதி முடிவை மனித உரிமைகள் பணிக்குழு தனது இரண்டாவது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்த அறிக்கை கடந்த 29ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இந்தப் பணிக்குழு தமது அறிக்கையில் கொலையுண்டவர்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு போதுமானளவு நஷ்டஈட்டையாவது வழங்க வேண்டும் எனவும், மரண அத்தாட்சிப் பத்திரங்களை வழங்க வேண்டும் எனவும் ஆலோசனை கூறியுள்ளது. பாராளுமன்றத்தில் நான் பிரதிநிதித்துவம் செய்யும் மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமூலை அகதிகள் முகாமில் 45 ஆயிரம் பேர் முன்னிலையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

158 பேர் இராணுவத்தின் பாதுகாப்பில் கொண்டு செல்லப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாகப் பூரண விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என நான் கேட்டுக் கொண்டேன். தற்போது மனித உரிமைகள் பணிக்குழு தனது அறிக்கையில் இந்த மனிதாபிமானமற்ற கொலைகளில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினரில் நான்கு பேரை அடையாளம் கண்டுள்ளார்கள். மனித உரிமைகள் பணிக்குழு ஆலோசனை கூறியுள்ளது போல் கொலையுண்டவர்களில் தங்கி வாழ்வோருக்குப் போதிய நஷ்டஈடும், மரண அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

### தீர்த்தத் திருவிழா சிறப்புற நிறைவேற்றம்

(பருத்தித்துறை)

சிறிலங்கா அரசின் பாதுகாப்புப் படையினர் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய கடல் தீர்த்தத் திருவிழாவை கடலில் நடாத்துவதற்கு அனுமதி கொடுக்க மறுத்தபோதும் வல்லிபுர ஆழ்வார் ஆலய கடல் தீர்த்தத் திருவிழா வழமை போல் கடலில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இக் கடல் தீர்த்தத் திருவிழாவிலே பெருந்தொகையான பக்தர்கள் கலந்து கொண்டு பெருமான் கடலில் தீர்த்தமாடியதைக் கண்டு அருள் பெற்றார்கள். இவ் ஆலயத்தில் தேர்த் திருவிழா கேணித் தீர்த்தத் திருவிழா ஆகியனவும் வெகு சிறப்பாக நடைபெற்றன. (25)

## மூடைகள் சரிந்து விழுந்து உணவுக் களஞ்சியம் சேதம்

யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினரின் களஞ்சியத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மூடைகள் சரிந்து வீழ்ந்ததில் அக்களஞ்சியம் முற்றாகச் சேதமடைந்தது.

அண்மையில் கோண்டாவில் பகுதியில் நடைபெற்ற குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் அதிர்வுற்றிருந்த மூடைகளே நேற்றுமாலை சரிந்துவீழ்ந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது. இம் முகாமிலிருந்த உணவு மூடைகள் அவசர அவசரமாக வேறு களஞ்சியங்களுக்கு மாற்றும் வேலை தீவிரமாக நடைபெற்றது.

இன்றுமுதல் இக்களஞ்சியத்திலிருந்தே உணவு மூடைகள் விநியோகிக்கப்படும் என புனர்வாழ்வுப் பகுதி களஞ்சியப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

## சட்ட விரோத சிறைச்சாலை இன்னும் செயற்படுகின்றது

சந்திரா பீரிஸ்

சட்ட விரோத சிறைச்சாலைகள் தெய்யத்த பகுதியில் இன்னும் இயங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. காணாமற் போனோர் மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் பெற்றோர் நடத்திய சத்தியாக்கிரகத்தின் போது இது தெரிவிக்கப்பட்டது.

காணாமற் போனவர்கள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டவர்களின் பெற்றோர் நேற்று முன்தினம் நுகேகொட பகுதியில் நடத்திய சத்தியாக்கிரகத்தின் போது தெய்யத்த பகுதியில் சட்ட விரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை இருப்பதாகவும், இதில் இன்றும் பலர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் இச் சங்கத்தின் செயலாளர் சந்திரா பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெ[illegible]விக்கையில், அதிகாரம் இல்லாத சிறைச்சாலைகள் அல்லது சட்டரீதியற்ற சிறைச்சாலைகள் இன்னும் எவ்வளவு இருக்கும் என்பதை கூற முடியாது இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

### ஒத்தி வைப்பு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளையின் அனுசரணையுடன் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவு எதிர்வரும் 9ம் 10ம் திகதிகளில் மருதனார்மடம் யாழ் இராமநாதன் கல்லூரியில் நடத்த உத்தேசிக்கப்பட்டிருந்த ஸ்தாபகர் ஹென்றி டுனான் நினைவு தின விழா கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
07 08. 1976

வீரச்சாவு:
18. 08 1992

திதி:
07. 10 1993

### வீரவேங்கை நாகமுத்து

(இராமச்சந்திரன் கோணேஸ்)

சில்லாலை றோ. க. பாடசாலை மாணவன்

கோணேசர் தந்த கோணேசா!
பாசமிகு மகனானாய்!
பாரிலுள்ளோர் போற்றுவனாய்!
நேசமுடன் வாழ்ந்தாய்!
தேசப்பற்றாளனாய்!

பெற்றோர்: திரு. இ. இராமச்சந்திரன்
திருமதி இ. இரத்தினேஸ்வரி
சகோதரர்: கௌசல்யா, சுரேஸ், சதீஸ்

## பனாட்டு தேவை

தரமான மண் அற்ற பனாட்டு 10 கிலோவிற்கு மேற்பட்ட அளவுகளில் எம்மால் கொள்வனவு செய்யப்படும்

பனாட்டை கொள்வனவு செய்து எமக்கு விநியோகிக்கக் கூடிய முகவர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

கிழமை நாட்களில் காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 30 மணி வரை

நவ உதயம்,
203, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

(6229)

## அறிவித்தல்

வட இலங்கைச் சங்கீதசபை புதிய பாடத்திட்டம்

மேற்படி சபைநடாத்தும்செய்முறைஅறிமுறைத்தேர்வுகளுக்கான புதிய பாடத்திட்டம் வெளிவந்துவிட்டது. 1994-ம் ஆண்டு தொடக்கம் நடைபெறும் தேர்வுகளுக்கு புதிய பாடத்திட்டம் நடைமுறைக்குகொண்டுவரப்படஉள்ளது. பாடத்திட்டப்பிரதிகள் கொள்வனவுசெய்ய விரும்புவோர் சபைப்பணிமனையில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் பிரதிஒன்றின் விலை ரூபா: 100/- (நூறு)

இ. சுந்தரலிங்கம்

## ஏழாவது ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் றொபின்

(செல்வரட்ணம் இராசபகவான்)

(திருக்கோணமலை)

பிறப்பு:
28-11 1959

வீரச்சாவு:
07 10 1986

வெறிகொண்ட சிங்களத்தின்
முதுகொடித்து நீ கண்ட
களங்கள் எத்தனை, எத்தனை
தன்னிகர் இல்லாத்தலைவன் வழிதனில்
எமது இனத்தின் விடிவிற்காய்
உன்னையே அர்ப்பணித்தாய்
ஆனால் உந்து நினைவு நனவாக உவகையுடன்
நீ விட்டுச்சென்ற பணியை நாம் தொடர்கின்றோம்.

29, ஆடியபாதம் வீதி, — குடும்பத்தினர்
திருநெல்வேலி

போட்டியிலே வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச.செல்லத்துரை பிரதம விருந்தினராகவும், பருத்தித் துறைப் பிரதேச சபைச் செயலாளர் திரு. ச. செவ்வந்தி நாதர் விசேட விருந்தினராகவும் கலந்து கொண்டனர். திருமதி செல்வநாயகி செல்லத்துரை பரிசில்களை வழங்கினார். திரு. க. முருகையா நன்றியுரை வழங்கினார். [25]

## அரையாண்டு பதவி உயர்வுப் பரீட்சை

மதுவரித்திணைக்களப் பரிசோதகர்களுக்கான அரையாண்டு பதவி உயர்வுப் பரீட்சை 1993 ஆம் ஆண்டு எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை9.00மணிக்குகொழும்பு மது வரித்திணைக்கள ஆணையாளர் பணிமனையில் நடைபெறும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப்பரீட்சைக்குரிய அறிமுக அட்டைகள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், கிடைக்காத பரீட்சார்த்திகள் கொழும்பில் உள்ள தலைமைச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## போர்க்கால கருத்தரங்கு

தெல்லிப்பழை-உடுவில் வட்டவைப் பிரிவுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளால் போர்க்கால கருத்தரங்குகள் பரவலாக நடைபெற்று வருகின்றன போர்க்கால சூழலில் மக்களின் பங்களிப்பு பற்றிய கருத்துரைகள் இவற்றில்இடம் பெறுகின்றன. நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் ஏழாலை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கருகில் நடைபெற்றது.இன்று மாலை 6 00 மணியளவில் மயிலங்காடு சிறி முருகன் சனசமூக நிலையத்திலும்,இரவு 8.00 மணிக்கு புன்னாலைக் கட்டுவன் சந்திக் கருகிலும் இக்கருத்தரங்குகள் நடைபெறும். (11)

★ ★

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுச்கழகத்தின் வடமராட்சி கோட்டத்தினரால் வடமராட்சியின் வட்டங்கள் தோறும் போர்க்கால எழுச்சி யாத்திரையும்,வீதி நாடகங்களும நடைபெற்று வருகின்றன

இவ்வீதி நாடகங்கள் சமகால போர்க்காலநிகழ்வுகளை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வீதி நாடகங்களில சிறிலங்கா அரசின் யுத்த முஸ்தீபுகளும், அதனை தடுக்கும் நடவடிக்கைகளும் வெகு தெளிவாக எடுத்தியம்பப்பட்டு வருகின்றன.

பெருந்திரளான மக்கள் கலந்து கொள்ளும் இவ் நிகழ்வுகளில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் உரையாற்றியும் வருகின்றனர்.



18. 08 1992

திதி:
07. 10 1993

## வீரவேங்கை நாகமுத்து
(இராமச்சந்திரன் கோணேஸ்)

சில்லாலை றோ. க. பாடசாலை மாணவன்
கோணேசர் தந்த கோணேசா!
பாசமிகு மகனானாய்!
பாரிலுள்ளோர் போற்றுவனாய்!
நேசமுடன் வாழ்ந்தாய்!
தேசப்பற்றாளனாய்!

பெற்றோர்: திரு. இ. இராமச்சந்திரன்
திருமதி இ. இரத்தினேஸ்வரி
சகோதரர்: கௌசல்யா, சுரேஸ், சதீஸ்
அம்மம்மா: சபாபதி அன்னப்பிள்ளை
ஏகாம்பரம குடும்பத்தினர்

தற்காலிக முகவரி
டச்சுறோட் முரசொலி அருகாமை
கல்வியங்காடு.

(6129)

## 385-ம் நாள் நினைவஞ்சலி

உதயம்: 05 — 01 — 1968



வீரசொர்க்கம்: 18 — 10 — 1992

சாள்ஸ் அன்ரனி வேவுப்படை

## லெப்டினன்ட் வேலன் (கிறீஸ்)
## வீணுகோபால் கிருஷ்ணகுமார்

புற்றளை, புலோலி.

**திதி அபரஅட்டமி 08 - 10 - 93**

இந்திய இராணுவம் கதி கலங்கிட சிங்களப்
படை சிதறி மடிந்திட கடமை
கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
களம் பல கண்டு சாதனை பல புரிந்து
சரித்திரம் படைத்த மாயவா

வெற்றிலைக் கேணியில் நெஞ்சினில் வேட்டு பாய்ந்து வீரசொர்க்கம் அடைந்த பரம்பரை வீரனே உன் எழிலும் தேசப்பற்றும் கடமையும் சரித்திரமாகும்.

இவரது ஞாபகார்த்தமாக 1993 - 10 - 08 வெள்ளிக் கிழமை தோட்டத்து ஞானவைரவர் ஆலயத்தில் குரு பூசை நடைபெறும்.

(6228) - குடும்பத்தினர்

முடன் தொடர்பு கொள்ளவும்.

கிழமை நாட்களில் காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 30 மணி வரை

நவ உதயம்,
203, கோவில் வீதி.
நல்லூர், யாழ்ப்பாணம்

(6229)

## அறிவித்தல்

வட இலங்கைச் சங்கீத சபை புதிய பாடத்திட்டம்

மேற்படி சபைநடாத்தும்செய்முறைஅறிமுறைத்தேர்வுகளுக்கான புதிய பாடத்திட்டம் வெளிவந்துவிட்டது. 1994-ம் ஆண்டு தொடக்கம் நடைபெறும் தேர்வுகளுக்கு புதிய பாடத்திட்டம் நடைமுறைக்குகொண்டுவரப்படஉள்ளது.பாடத்திட்டப்பிரதிகள் கொள்வனவுசெய்ய விரும்புவோர் சபைப்பணிமனையில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் பிரதிஒன்றின் விலை ரூபா: 100/- (நூறு)

இ. சுந்தரலிங்கம்
யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளரும்,
வடஇலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்

(சி-7556)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் மலர்வு: 21 — 04 — 1952



விண்ணில் விரைவு: 07 — 09 — 1993

திருமதி
## சறோஜினிதேவி சுந்தரலிங்கம்

மண்ணிற் பிறந்தாய், மகிழ்ந்தனர் பெற்றோர்
கல்வியிற் சிறந்தாய், களித்தனர் ஆசிரியர்
குடும்ப விளக்கானாய், குதூகலித்தார் கணவன்
பீடுடன் வாழ்ந்தாய், பெருமைகொண்டது புக்ககம்
இன்று விட்டுப் பிரிந்துவிட்டாய்
கதறித் துடிக்கிறதே கிராமமெல்லாம்!

நீ எந்நாளும் வணங்கும் வற்றாக்கை அம்பாளின் திருவடியில் இனி எந்நாளும் இருப்பாய் என்ற நம்பிக்கையில் ஆறுதல் அடைகின்றோம்.

எமது இல்லத்தில் இன்று (07 - 10 - 93) நடைபெறும் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் பங்குபற்றும் வண்ணம் உற்றார், உறவினர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை,
சுன்னாகம்.

(6230)

கணவன், தாய்,
சகோதரர்கள்



## கப்டன் றொபின்
## (செல்வரட்ணம் இராசபகவான்)

(திருக்கோணமலை)

பிறப்பு: 28-11 1959

வீரச்சாவு: 07 10 1986

வெறிகொண்ட சிங்களத்தின்
முதுகொடித்து நீ கண்ட
களங்கள் எத்தனை, எத்தனை
தன்னிகர் இல்லாத்தலைவன் வழிதனில்
எமது இனத்தின் விடிவிற்காய்
உன்னையே அர்ப்பணித்தாய்
ஆனால் உனது நினைவு நனவாக உவகையுடன்
நீ விட்டுச்சென்ற பணியை நாம் தொடர்கின்றோம்.

29, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்

— குடும்பத்தினர்

(6215)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-10-07

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - சாம்பல்தீவில் சிறிலங்கா இராணுவம் சுற்றிவளைத்த போது வீரச்சாவெய்திய-

**கப்டன் றொபின்** (செல்வரத்தினம் ராஜ்பகவான் - புன்னாலைக்கட்டுவன்வடக்கு - யாழ்)

மணலாறுப் பகுதியில் வழிபயணத்தின் போது பாம்பு தீண்டியதில் எமைப்பிரிந்த

★ **ரோசு** (தேவசகாயம் அமலதாஸ் - இருதயபுரம், மூதூர் - திருமலை)

1987ஆம் ஆண்டு வவுனியா, கற்பகபுரத்தில் தேச விரோதிகள் மேற்கொண்டதாக்குதலில் வீரச்சாவெய்திய

**பாபு** (பழனி சிவகுமார் - சாஸ்திரி கூழாங்குளம் - வவுனியா)

**தாஸ்** (செல்லத்துரை ஜோண்டேவிட் - இராஜேந்திரன் குளம் - வவுனியா)

1989ஆம் ஆண்டு மட்டு - கரடியனாறுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது வீரச்சாவெய்திய-

**ரோகி** (அ. விஜயகுமார் - கரடியனாறு - மட்டு)

1990ஆம் ஆண்டு மட்டு - தேற்றாதீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

மட்டு - பாரதி வீதிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு யாழ் - கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**விஜசன்** (பஞ்சலிங்கம் சிறிரஞ்சன் - உரும்பராய் - யாழ்)

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7555]

நல்லூர் இளைஞர் ... மன்றம்
யாழ்ப்பாணம்.

சிந்தனைக்கு

காலமும், கடலலையும், காத்திருக்கா எம் மனிதனுக்கும்.

– ஆங்கிலப் பழமொழி

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## காலத்தின் சுமை

சிங்களப் பேரினவாதம் அன்றிலிருந்து இன்று வரை தமிழர் இனப்படுகொலையையே நோக்கமாக கொண்டுள்ளது. இன மோதலினால் எவ்வளவோ இரத்தம் சிந்தப்பட்டு விட்ட பின்னரும் கூட சிங்கள பேரினவாதம், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண விரும்பவில்லை. தமிழரை அழித்தொழித்து விடுவதென்ற நோக்கிலேயே செயற்பட்டு வருகின்றது.

இந் நிலையில் தான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சிங்களப் பேரினவாதத்திற்கெதிராகப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும், தமிழர் தாயகத்தை காப்பாற்றவும் போரிட வருமாறு இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது.

தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டம், ஆயுதக் கலாசாரத்தில் ஏற்பட்ட மோகத்தினால் உருவானதல்ல. தவிர்க்க முடியாத வரலாற்று நிர்ப்பந்தத்தினால் தோற்றம் பெற்றது. சாத்வீகப் போராட்டத்தின் தோல்வியினால் ஏற்பட்டது. தமிழீழ கோரிக்கையும் இரவோடு இரவாக கொண்டு வரப்பட்ட ஒரு கோரிக்கை அல்ல. தமிழ் மக்கள் இனிமேலும் சிங்களவருடன் இணைந்து வாழ முடியாது என்ற நிலையில் கொண்டு வரப்பட்டது.

இலங்கையில் இருந்து ஆங்கிலேயர் வெளியேறும் முன்பே சிங்களப் பேரினவாத சக்திகள் தமிழ் மக்களை புறக்கணிக்கவும், இரண்டாம் தரப் பிரசைகள் என்ற ரீதியில் கருதவும் தொடங்கி விட்டார்கள். ஆனால் தமிழ் மக்களும், தமிழ் தலைவர்களும் ஐக்கிய இலங்கைக்குள் வாழவே விரும்பினர்.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் இருந்து சில தமிழ் தலைவர்களினால் தனி நாட்டுக் கோரிக்கை முன் வைக்கப்பட்ட போதும், தமிழ் மக்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. எழுபதுகளின் மத்தியிலும் இணைந்து வாழ்வது பற்றியே சிந்தித்தனர். ஆனால், சிங்கள பேரினவாதம் தமிழரை அணைத்துக் கொள்ளவோ, அவர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவோ விரும்பவில்லை.

தனிச் சிங்கள மொழிச் சட்டம் என்றும், அரசியலமைப்பு மாற்றம் என்றும் தமிழ் மக்களை இரண்டாம்தரப் பிரஜைகள் ஆக்கியது. இதே

# வட-கிழக்கு யுத்தத்தை சிலர் வியாபாரமாக்கியுள்ளனர்

### சிறிமாவோ தெரிவிப்பு

சிலர் வடக்கு- கிழக்கு யுத்தத்தை வியாபாரமாக்கியுள்ளனர். யுத்தம் முடிவிற்கு வந்தால் வியாபாரமும் முடிந்து விடும் என சிறிமாவோ பண்டாரநாயக்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், இன்று வடக்கில் அப்பாவிப் பொதுமக்கள் அகதிகளாகி விட்டார்கள். எங்களைப் போன்ற பொதுமக்களேஅவர்கள். புலிகள் அல்லயாழ்ப்பாண மக்கள் எங்களுக்கு உண்ண, குடிக்க தேவையான பொருள்களை உற்பத்தி செய்து தந்தார்கள். அரசாங்கத்தின் பிழையான கொள்கையால் புலிகளின் பிரச்சினை வளர்ந்தது. இப்பிரச்சினை பேச்சுவார்த்தைமூலம் தீர்க்கப்பட வேண்டியது. பாலஸ்தீன- இஸ்ரேல் பிரச்சினை எப்படித்தீர்க்கப்பட்டது. பேசித்தானே எங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தவுடன் வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண முயற்சிப்போம்.

வடக்கில் இருக்கின்ற பிரச்சினையை யுத்தத்தால் தீர்க்க முடியாது. அப்பாவி படையினரும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் இறப்பது மட்டும் தான் மிச்சம். வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு நாங்கள் எதிர்ப்பே இன்று இந்த நாட்டைப்பற்றி சிந்திக்கும் போது வேதனையாகவுள்ளது.

இன்று நாட்டைப்பற்றிச் சிந்தித்து நாங்கள் உருவாக்கிய அமைப்புக்கள் எல்லாம் நாசமாகிவிட்டன. கூட்டுத்தாபன திட்டங்கள் ஒழிக்கப்படுகின்றன எமது ஆட்சிக் காலத்தில் ரஷ்யா, சீனா, ஜேர்மனி முதலிய நாடுகளின் உதவி பெற்று இந்த கைத்தொழில்களை முன்னேற்ற அத்திவாரம் போட்டோம் அவைகள் முன்னேறிக் கொண்டு வந்தன இப்போது உள்ளோர் என்னென்னவோ வார்த்தைகளைக் கூறி என்னென்னவோ எல்லாம் செய்கிறார்கள். ஆனால் பணம் யாருடைய கைக்குள் போகிறதோ தெரியாது.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் அகதிகளாகி விட்டார்கள் அதேசமயம் சிலர் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களாகவும் மாறிவிட்டனர். சிலர் யுத்தத்தை வியாபாரமாக்கியுள்ளனர் யுத்தம் முடிவிற்கு வந்தால் வியாபாரமும் முடிந்து விடும்.

## யாழ்தேவி நடவடிக்கை விபரம் கூற சபாநாயகர் மறுப்பு

(கொழும்பு)

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை தொடர்பான விபரங்களையோ அல்லது அதன் இலக்குக் குறித்த விபரத்தையோ பாராளுமன்றத்தில் வெளியிட முடியாது என சிறிலங்கா பாராளுமன்றத்தில் சபாநாயகர் எம். எச். முகமட் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் யாழ்தேவி நடவடிக்கை பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

படையின் தரப்பில் என்றும் இல்லாதவாறு உயிரிழப்பு ஏற்படவும் அப்பாவிப்பொது மக்கள் பலியாகவும் 450க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்த நிலையிலும் சென்றடைந்த கிளாலியை கைவிட்டு அரசபடைகள் ஆனையிறவு முகாம் திரும்ப வேண்டிய காரணம் என்ன? என கொழும்புமாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா கேட்ட கேள்விக்கே இவ்வாறு அவர் பதிலளித்தார்.

## பொலிசாரின் துப்பாக்கி வெடியால் வீடியோ பார்த்தவர் பலி

கடந்த சனிக்கிழமையன்று வெலிக்கந்த பொலிஸ் நிலையம் அருகில் கடமையில் இருந்த கான்ஸ்டபிள் ஒருவர் சற்று தொலைவில் நடைபெற்றுக் கொண்டிருந்த வீடியோப் படக் காட்சியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தபோது அவரது கையில் இருந்த துப்பாக்கி தற்செயலாக வெடித்துவிட்டது இதனால் தொலைக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் பலியானார். மற்றொருவர் கடும் காயங்களுக்குள்ளானார். தற்பொழுது பொலிஸ் கான்ஸ்டபிள் விசாரணைக்குட் படுத்தப் பட்டுள்ளார்.

## கிளாலி போக்குவரத்து மூடப்பட்டு விட்டதாம்

(கொழும்பு)

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை மூலம் கிளாலி போக்குவரத்துக்கு தாம் முற்றுப் புள்ளி வைத்து விட்டதாக கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புலிகள் இந்த கடலேரியில் பயணம் செய்து எமக்கு விடு சவாலை ஏற்று செயற்பட்டு வெற்றி கண்டுவிட்டோம். யாழ்குடாநாட்டு மக்களின் போக்குவரத்திற்கு சங்குப்பிட்டி- கேரதீவு பாதையை புலிகள் விரும்பினால் திறக்கலாம் இது தொடர்பாக மீண்டும் யூ. என். எச். சீ ஆருடன் பேச்சு நடத்தி ஒரு சுமுகமான முடிவுக்கு வர முடியும் என

## பரிசளிப்பு வைபவம்

(மல்லாகம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்தபரிசளிப்பு வைபவம், எதிர்வரும் 11ம் திகதி திங்கட்கிழமைமருதனார் மடத்தில் அதிபர் திரு. நா. கந்தசாமி தலைமையில் காலை 9.00 மணிக்கு இடம்பெறும். வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (09)

## குழாய்க் கிணறு

(கொழும்புத்துறை)

பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் அமைந்துள்ள வளவில் ஆறாயிரம் ரூபா செலவில் குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகச் சங்கச்செயலாளர் தெரிவித்

## இயன்ற அத்தனை கரங்களும் ஆயுதம் ஏந்தட்டும்

1993-10-05

அன்பின் தம்பி தங்கைகளுக்கு!

உங்களையும் உங்களையொத்த எண்ணரிய இளம் உள்ளங்களையும் எண்ணியே இதனை எழுதுகிறேன்.

உணர்வைப் பரிமாறவும் பங்குகொள்ளவுமே இதனை எழுதுகிறேன்.

எதிரியின் தாக்குதல் எம்மை மேலும் ஒன்றாக்கி விட்டது. இந்த ஒத்தநிலையும் உறுதியும் எமக்குப் பலமாகி நின்று ஈழத்தமிழினம் என எம்மை ஒன்றிணைக்க முடியுமே அல்லாது பலவீனப்படுத்த முடியாது!

நாம் பலம் கொண்ட ஓரினம் என்பதையும், எம் தாய் மண்ணைக் காத்து நாம் முன்னர் இருந்தது போலத் தனி நாடாக, சுயமாக வாழத் துணிந்துள்ள இனம் என்பதையும், எம் எதிரி உணர்ந்து கொண்டு கடந்த 40 வருடமாக எம்மண்ணைப் படிப்படியாகப் பறித்திருக்கிறான். தமிழின ஒடுக்குதலை அவன் ஒன்றன் பின் ஒன்றாக தனது அரச இயந்திர மூலம் அமுலாக்கி வந்திருக்கிறான்.

பட்டிப்பளைப் பகுதி 'கல்ஓயா' ஆகிற்று! இது போன்ற பாரிய சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மூலம் எம் தொன்று தொட்ட தமிழ்ப் பிரதேசங்கள் பல அரசின் கெடுபிடிக்கு உள்ளாகியதும், தமிழ் மக்கள் அங்கு வாழ முடியாது அகற்றப்பட்டுள்ளதும் தெரிந்ததே! ஆனால் இன்று,

நிலப்பறிப்பு மட்டுமன்றி, **தமிழின ஒழிப்பையே** பகைவன் திட்டமிட்டு அதனைத் தன் முழுப் படை பலம் மூலம் அமுலாக்க முன்வந்துள்ளான்.

தமிழ்க் கிராமங்கள் சுற்றிவளைக்கப்படுகின்றன. இளம் பருவத்தினர் கைதாகிக் கொண்டு செல்லப்படுகின்றனர். கொலை செய்யப்படுகின்றனர். காணாமற் போதல் என்பன சிங்கள அரசு செய்யும் நாளாந்த நிகழ்வுகளாய் விட்டன.

இவை மட்டுமா? பொதுமக்கள் மீது வான் தாக்குதல், இடையறா எறிகணை வீச்சு! 80 வயது மூதாட்டியிலிருந்து இரண்டு வயதுக் குழந்தை வரை தங்கள் வீட்டிலிருந்தபடி குண்டுவீச்சுக்கும், எறிகணைக்கும் இலக்காகித் துடிதுடித்து உயிர் விடும் நிலை எதற்கு? ஆயிரமாயிரம் குடும்பங்களின் இடம்பெயர்வும், அனாதை நிலையும் எதற்கு? புக்காரா உலங்குவானூர்தி, சுப்பர்சோனிக் விமானத் தாக்குதல்கள் எதற்கு? வீடுகள், கடைகள், பாடசாலைகள், கோவில்கள் இங்கு இடித்து தகர்வது எதற்கு? படகுகளை வளைத்து பிரயாணிகள் மீது வாள்வெட்டும், உடற்சிதைவும் எதற்கு?

... தமிழர் என்பதால்!

இத்தனையும் செய்ய எம் எதிரி தனது கூலிப்படையின் பலம் கொண்டும், கையேந்திப் பெற்ற பிறநாட்டு ஆயுத உதவி கொண்டும் முன்னேற முயலுகிறான்.

ஆனால்,

125 படையினர் பலி, இதைவிட 170 க்கும் மேற்பட்டோர் காயம்! இவை இம்மாத முதல்நாட் செய்திகளாயின. இவை எதிரியினிடையே எண்ணாத திகைப்பையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளமை உண்மை. ஆனால் இவை இலேசாக வந்தவை அல்ல. விடுதலைப் புலிகளின் 80 போராளிகளின் வீரச்சாவின் மீதே இவை சாதனையாக முடிந்தது.

இவை தந்த தோல்வியுடன் எதிரியின் நடவடிக்கை முடிந்துவிடவில்லை. 380 படகுகள் எரிப்பு, வீடுகள், கடைகள் தீக்கிரை என்கின்ற பேடிச் செயல்களையும் செய்யாது எம் எதிரி பின்னடைந்து விடவில்லை.

இப்போதும் அவன் பூரணமாகப் பின் வாங்கிவிட்டான் என நாம் எண்ணி மகிழ்வதற்கு எதுவுமில்லை. அவன் மீண்டுமொரு முனையிலிருந்து தாக்கவே திட்டம் தீட்டுகிறான்.

ஒதுங்கிவிட்ட அவன் இன்னும் பெருகிக் கொண்டு வரவே முயல்வான்.

அவனை எம் எல்லைப்புறத்தில் சந்தித்துத் தாக்கவும் கொல்லைப்புறத்தில் வரின் அவனை அடித்து வீழ்த்தவும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

போர் எந்நேரமும் எங்கும் நேரலாம், விழிப்பாக இருப்பது எம் கடன்.

அவன் முன்னர் பல தடவை துரத்தப்பட்டமையும் ...

ஏற்பட்டது. தமிழீழ கோரிக்கையும் இரவோடு இரவாக கொண்டு வரப்பட்ட ஒரு கோரிக்கை அல்ல. தமிழ் மக்கள் இனிமேலும் சிங்களவருடன் இணைந்து வாழ முடியாது என்ற நிலையில் கொண்டு வரப்பட்டது.

இலங்கையில் இருந்து ஆங்கிலேயர் வெளியேறும் முன்பே சிங்களப் பேரினவாத சக்திகள் தமிழ் மக்களை புறக்கணிக்கவும், இரண்டாம் தரப் பிரசைகள் என்ற ரீதியில் கருதவும் தொடங்கி விட்டார்கள். ஆனால் தமிழ் மக்களும், தமிழ் தலைவர்களும் ஐக்கிய இலங்கைக்குள் வாழவே விரும்பினர்.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் இருந்து சில தமிழ் தலைவர்களினால் தனி நாட்டுக் கோரிக்கை முன் வைக்கப்பட்ட போதும், தமிழ் மக்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. எழுபதுகளின் மத்தியிலும் இணைந்து வாழ்வது பற்றியே சிந்தித்தனர். ஆனால், சிங்கள பேரினவாதம் தமிழரை அணைத்துக் கொள்ளவோ, அவர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவோ விரும்பவில்லை.

தனிச் சிங்கள மொழிச் சட்டம் என்றும், அரசியலமைப்பு மாற்றம் என்றும் தமிழ் மக்களை இரண்டாம்தரப் பிரஜைகள் ஆக்கியது. இதே வேளை, தமிழர் தாயகத்தையும் சிங்களக் குடியேற்றம் மூலம் ஆக்கிரமிக்கும் நடவடிக்கையிலும் இறங்கியது. சாத்வீக ரீதியாக சத்தியாக்கிரகம், மறியல் போராட்டம் எனத் தமிழர் தமது எதிர்ப்பைக் காட்ட முற்பட்டபோது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. காலத்திற்குக் காலம் அது பெரும் இன வன்முறையாகவும் வெடித்தது.

இந்நிலையில்தான் தமிழ்மக்கள் தனித்து வாழ முடிவு செய்தனர். சிங்களப் பேரினவாதத்துடன் இணைந்து வாழ்தலென்பது சாத்தியமாகாத ஒன்று என்பதோடு அது தமிழ் இனத்தை அழித்துவிடும் என்பதையும், தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து விடும் என்பதையும் புரிந்து கொண்டனர்.

இந்த வரலாற்றுச் சூழ்நிலையில் தான், விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழரின் போராட்டத்திற்குத் தலைமை தாங்க முன்வந்தது. ஆயுதப் போராட்டத்தை வழிநடத்திச் செல்லவும், தமிழ் மக்களைப் பாதுகாக்கவும் முற்பட்டது. இது ஒரு தற்செயலான நிகழ்வல்ல. ஒரு காலத்தின் கட்டாயமாக அமைந்தது. இதைத் தொடர்ந்து, தமிழர் விடுதலைப் போராட்டம் மிகவும் துரிதமாக வளர்ச்சி கண்டது. சிங்களப் பேரினவாதம் அடிக்கடுக்காக பல தோல்விகளைச் சந்திக்க வேண்டியும் வந்தது.

ஆயினும் சிங்களப் பேரினவாதம், தனது கொள்கைகளையோ, நடவடிக்கைகளையோ கைவிடவில்லை. தமிழர் தாயகத்தை எவ்வாறேனும் ஆக்கிரமிக்க வேண்டும். இனப்படுகொலை மூலம் தமிழ் இனத்தை அழித்தொழிக்க வேண்டும் என்ற ரீதியிலேயே தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது. சிறிலங்காவின் முழு வளத்தையும் போருக்காகவும், தமிழ் இனப் படுகொலைக்காகவும் திசை திருப்பி விட்டுள்ளது.

இந்நிலையில், தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் விரும்பியோ, விருப்பமின்றியோ போரிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இது விடுதலைப் புலிகளுக்கு உதவுவதற்கான போராட்டமோ அன்றி விடுதலைப் புலிகளுக்கான போராட்டமோ அல்ல. தமிழரின் பாதுகாப்பிற்கானதும், ஆக்கிரமிப்பிற்கு எதிரானதுமான போராட்டம். இதில் விடுதலைப் புலிகளின் பங்கு, தனித்து வாழ்வதென்று முடிவெடுத்து விட்ட தமிழ்மக்களின் போராட்டத்திற்கு தலைமை தாங்கி வழிகாட்டுதலே ஆகும். இது அவர்களுக்குக் காலம் ஏற்படுத்திய நிர்ப்பந்தம். இதில் பங்களிக்க வேண்டியது தமிழர் அனைவரதும் கடமை.

## வீடியோ பார்த்தவர் பலி

கடந்த சனிக்கிழமையன்று வெலிக்கந்த பொலிஸ் நிலையம் அருகில் கடமையில் இருந்த கான்ஸ்டபிள் ஒருவர் சற்று தொலைவில் நடைபெற்றுக் கொண்டிருந்த வீடியோப் படக் காட்சியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தபோது அவரது கையில் இருந்த துப்பாக்கி தற்செயலாக வெடித்து விட்டது இதனால் தொலைக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் பலியானார். மற்றொருவர் கடும் காயங்களுக்குள்ளானார். தற்பொழுது பொலிஸ் கான்ஸ்டபிள் விசாரணைக்குட் படுத்தப் பட்டுள்ளார்.

## கிளாலி போக்குவரத்து மூடப்பட்டு விட்டதாம்

(கொழும்பு)

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை மூலம் கிளாலி போக்குவரத்துக்கு தாம் முற்றுப் புள்ளி வைத்து விட்டதாக கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புலிகள் இந்த கடலேரியில் பயணம் செய்தது எமக்கு விடுக்கப்பட்ட சவாலாகும். அச்சவாலை ஏற்று செயற்பட்டு வெற்றி கண்டுவிட்டோம். யாழ்குடாநாட்டு மக்களின் போக்குவரத்திற்கு சங்குப்பிட்டி - கேரதீவு பாதையை புலிகள் விரும்பினால் திறக்கலாம் இது தொடர்பாக மீண்டும் யூ. என். எச். சீ ஆருடன் பேச்சு நடத்தி ஒரு சுமூகமான முடிவுக்கு வர முடியும் எனவும் அவர் கூறினார்.

## பரிசளிப்பு வைபவம்

(மல்லாகம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்தபரிசளிப்பு வைபவம், எதிர்வரும் 11ம் திகதி திங்கட்கிழமைமருதனார் மடத்தில் அதிபர் திரு. நா. கந்தசாமி தலைமையில் காலை 9.00 மணிக்கு இடம்பெறும். வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (09)

## குழாய்க் கிணறு

(கொழும்புத்துறை)

பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் அமைந்துள்ள வளவில் ஆறாயிரம் ரூபா செலவில் குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகச் சங்கச்செயலாளர் தெரிவித்துள்ளார். (24)

# மாஸ்கோ சம்பவங்களால் 100 பேர் பலி, 500க்கு மேல் காயம்

## அதிகாரபூர்வமாக அறிவிப்பு

மாஸ்கோவில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் சுமார் நூறு பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், ஐந்நூறுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் எனவும் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் வெள்ளை மாளிகை எனப்படும் பாராளுமன்றக் கட்டடத்தினுள் கொல்லப்பட்ட அல்லது காயப்பட்டவர்களது எண்ணிக்கை இதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் திங்கட்கிழமையன்று பாராளுமன்றக் கட்டடத்திலிருந்து சுமார் ஆயிரத்து ஐந்நூறு பேர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை பத்திரிகைகள் எதுவும் நேற்று முன்தினம் மாஸ்கோவிலிருந்து வெளியிடப்படவில்லை. மாஸ்கோ வீதிகளில் இன்னமும் திரிந்து கொண்டிருக்கும் ஆயுதம் ஏந்தியோரை தீர்த்துக் கட்டிவிடுமாறு பொலிசாருக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் உத்தரவு பிறப்பித்திருக்கும் அதிபர் யெல்ட்சின், எல்லாக் கூட்டங்களுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவித்துள்ளார்.

இதனிடையே அரசு தரப்பு வழக்கறிஞர் ஒருவரைப் புதிதாக நியமித்திருப்பதோடு, ஆயுதம் ஏந்திய கிளர்ச்சியில் முனைப்போடு பங்கேற்றவர்கள் மற்றும் அக்கிளர்ச்சிக்கு ஏற்பாடு செய்தவர்களுக்கு எதிராக மாஸ்கோ பிராஸ்சிகியூட்டர் அலுவலகம் கிரிமினல் விசாரணைகளையும் துவக்கியுள்ளது.

மேலும் பிராந்திய நிர்வாகிகளோடு நடைபெறவிருந்த கூட்டத்தையும், பெடரேஷன் அமைப்புக்களைச் சந்திக்கவிருந்த கூட்டத்தையும் அதிபர் யெல்ட்சின் ரத்துச் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாபர் மசூதி தகர்ப்பு 40பேர் மீது வழக்கு

(டில்லி)

கடந்த டிசம்பரில் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பாக 40 பேர் மீது இந்திய மத்திய புலனாய்வுக்குழு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. பாரதிய ஜனதா கட்சி தலைவர் அத்வானி, முரளி மனோகர் ஜோசி, உத்தரப் பிரதேச முன்னாள் முதலமைச்சர் கல்யாண்சிங் சிவசேனை தலைவர் பால்தக்ரே உட்பட 40 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## விடுதலைப் புலிகள் நடமாட்டம் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை

### தமிழக ஆளுநர் தகவல்

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இருப்பதுபற்றி ஊர்ஜிதமான தகவல்கள் எதுவும் இல்லை என்று தமிழக ஆளுநர் டாக்டர் எம். சென்னா ரெட்டி தெரிவித்தார். சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏற்பட்ட அனர்த் தங்களுக்கு உதவி புரியும் வகையில் தாம் கோரிக்கை விடுத்த நிதியத்திற்கு தமிழக மக்கள் முப்பது இலட்சம்ரூபாவை தந்துதவி இருப்பதாகவும் தெரிவித்தார்.

## காற்றுள்ள போதே தூற்றிக் கொள் நீர் கிடைக்கும்போதே சேர்த்துக் கொள்

உதவி கொண்டும் முன்னேற முயலுகிறான்.

ஆனால்,

125 படையினர் பலி, இதைவிட 170 க்கும் மேற்பட்டோர் காயம்! இவை இம்மாத முதல்நாட் செய்திகளாயின. இவை எதிரியினிடையே எண்ணாத திகைப்பையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளமை உண்மை. ஆனால் இவை இலேசாக வந்தவை அல்ல. விடுதலைப் புலிகளின் 80 போராளிகளின் வீரச்சாவின் மீதே இவை சாதனையாக முடிந்தது.

இவை தந்த தோல்வியுடன் எதிரியின் நடவடிக்கை முடிந்துவிடவில்லை. 380 படகுகள் எரிப்பு, வீடுகள், கடைகள் தீக்கிரை என்கின்ற பேடிச் செயல்களையும் செய்யாது எம் எதிரி பின்னடைந்து விடவில்லை.

இப்போதும் அவன் பூரணமாகப் பின் வாங்கிவிட்டான் என நாம் எண்ணி மகிழ்வதற்கு எதுவுமில்லை. அவன் மீண்டுமொரு முனையிலிருந்து தாக்கவே திட்டம் தீட்டுகிறான்.

ஒதுங்கிவிட்ட அவன் இன்னும் பெருகிக் கொண்டு வரவே முயல்வான்.

அவனை எம் எல்லைப்புறத்தில் சந்தித்துத் தாக்கவும் கொல்லைப்புறத்தில் வரின் அவனை அடித்து வீழ்த்தவும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

போர் எந்நேரமும் எங்கும் நேரலாம், விழிப்பாக இருப்பது எம் கடன்.

அவன் முன்னர் பல தடவை துரத்தப்பட்டமையும் தூரத்தே நிறுத்தப்பட்டமையும் புதிதான ஒரு நிகழ்வு அல்ல.

அடித்து நிறுத்தப்படும் போதும் துரத்தப்படும் போதும் தான் அவன் பின்னடைவு பெறுகிறான், ஓடுகிறான்!

அடித்தால் தான் எதிரி ஓடுவான்.

நாம் வாழ வேண்டின் எம் சந்ததி இம் மண்ணில் தொடர்ந்து வாழ வேண்டின் இன்று அழிக்க வரும் எதிரியை நாம் அழித்தே ஆக வேண்டும்!

இந்த தெளிவும் உறுதியும் - எங்கள் இணைந்த ஆயுத மேந்திய கரங்களுமே - எங்கள் பலம்.

எதிரி எம்மை அழிக்கும் நோக்குடன் வருகின்றான். அவன் ஆயுத பலத்துடன் வருகிறான்.

அவனுக்குப் பதில் சொல்ல வல்லது எமது ஆயுத பலமும் இலட்சியத் துணிவும் தியாகமுமே! இதை நாம் நிலை நாட்டியே வருகின்றோம்!

அவனுக்கு குழந்தைகள் பாலகர் என்ற வேறுபாடில்லை!

நாம் தலைவணங்கி பிடிபட்டு அழிய முடியாது. பேச்சுக்கு இனி இடமில்லை.

எம் இன்றைய வாழ்வுக்கும் வருங்கால விடிவுக்குமான ஆயுதப்போராட்டம் எம் கண் முன் நடைபெறுகிறது.

இதில் தாமதத்திற்கு இடமில்லை. இயன்ற அத்தனை கரங்களும் ஆயுதமேந்தும் கரங்களாக விடுதலைப் போராட்ட வடிவங்களாக மாற வேண்டும்.

ஏனைய முதியோர்க்கும் நிச்சயம் பங்குண்டு. பாதிக்கப்படுவோர் அனைவருக்குமே அதற்கேற்ப இயன்ற எம் பங்கை நாம் அளிப்போம்.

தாமதத்திற்கு இடமில்லை.
நன்றி மீண்டும் சந்திப்போம்.

உங்கள்
**ஐயப்பன்.**

## சுதந்திர உணர்வு, நம்பிக்கை வெள்ளைப் பிரம்பு தருகிறது

(யாழ்ப்பாணம்)

விழிப்புலன் இழந்தவர்களின தன்னம்பிக்கை, சுதந்திர உணர்வு, சமத்துவ உணர்வு என்பவற்றின் சின்னமாக வெள்ளைப் பிரம்பு விளங்குகிறது என்று பார்வையற்ற மக்கள் சம்மேளனத்தின் யாழ்ப்பாண கிளைத் தலைவர் ராஜா எஸ். வேலுத்தேவர் தெரிவித்து உள்ளார். அக்டோபர் 15ல் வரும் வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டிருக்கும் செய்தியில் மேலும் தெரிவிக்கையில், இன்று தொழிற்துறையில் நிலவும் போட்டிகளுக்கு மத்தியில் விழிப்புலனிழந்தோரையும் கணித்து அவர்களுக்கும் தொழில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல் சிரமமாக இருப்பினும் அது சமூகத்தின் கடமையாகும். அவர்கள் கேட்பது தங்கள் திறமையை நெறிப்படுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பமே. அவர்கள் உங்கள் தயவையோ, கருணையையோ நாடவில்லை. ஆனால் தம்மையும் மனித கௌரவத்துடன் நடாத்தும் படியே கேட்கின்றனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



# ஈழநாதம்

### உயிருக்கு பாதுகாப்பு ஏற்படும் வரை

# ஜேர்மனியிலிருந்து தமிழர் திருப்பி அனுப்பபடமாட்டார்

(கொழும்பு)

ஜேர்மனியில் தற்போது சுமார் 30 ஆயிரம் இலங்கை அகதிகள் உள்ளனர். இலங்கையில் அவர்களது உயிர் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கப்படும் வரை இலங்கைக்கு அவர்களை திருப்பி அனுப்பி விடமுடியாது'' என தற்போது கொழும்பு வந்துள்ள ஐரோப்பிய பாராளுமன்ற பிரதிநிதிக் குழுவில் அங்கம் வகிக்கும் ஜேர்மன் பிரதிநிதி தெரிவித்தார்.

நேற்றுக் காலை ஜனாதிபதி விஜேதுங்காவை சந்தித்த இந்த ஐரோப்பிய பாராளுமன்ற பிரதிநிதிகள் குழுவினர் பின்னர் ஒபரோய் ஹோட்டலில் செய்தியாளர்களை சந்தித்தனர். அவ்வேளையிலேயே இக்குழுவில் இடம் பெற்றிருந்த ஜேர்மன் பிரதிநிதி மேற்கண்டவாறு கூறினார்,

செய்தியாளர்களிடம் பேசிய இக்குழுவின் தலைவரான பிரிட்டனை சேர்ந்த திருமதி அனட்'_ாபோர்லஸ், 1983 இலிருந்தும் 1991 ஆம் ஆண்டிற்குப் பின்னரும் இலங்கையிலிருந்து காணாமற்போன ஆயிரக்கணக்கானோர் என்ன ஆனார்கள் என்ற விபரமும் சிறிலங்கா அரசுடனான தமது பேச்சின் போது ஆராயப்பட்டதாக கூறினார்.

முன்னதாக இக்குழுவினரை சந்தித்த ஜனாதிபதி விஜேதுங்கா இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது என்றும் எதிர்வரும் பெப்ரவரியில் கிழக்கில் சர்வசன கருத்துக்கணிப்பு எடுக்கப்படும் என்ற நம்பிக்கை தமக்கு உள்ளது என்றும் கூறினார்.

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண அரசு தயாராக உள்ளது. இனப்பிரச்சினை என்று பயங்கரவாத நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனவும் விஜேதுங்கா மேலும் தெரிவித்தார்.

கொழும்பு வந்துள்ள ஐரோப்பிய பாராளுமன்ற பிரதிநிதிகள் குழுவில் இத்தாலி ஜேர்மனி, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் உட்பட 10 பேர் அங்கத்துவம் வகிக்கின்றனர். நேற்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இக்குழுவினருடனான சந்திப்பின் போது ஜனாதிபதி விஜேதுங்காவுடன் ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் நிஹால் செனிவிரட்ன ஆகியோரும் உடனிருந்தனர்.

## வைத்திய அதிகாரிகள் குழு பருத்தித்துறை வந்தனர்

யாழ். போதனா வைத்திய சாலையைச் சேர்ந்த எட்டு வைத்திய அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கொழும்புக்கு சென்றிருந்த இவ் வைத்திய அதிகாரிகள் குழு பலாலி இராணுவ முகாமில் எட்டு தினங்கள் தங்கியிருந்து விட்டு நேற்று 'குமாரி' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்தனர்.

இவர்கள் கடந்த 28ஆம் திகதி பலாலிக்கு வந்த போதிலும் யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்ததினால் யாழ். நோக்கி செல்ல அனுமதி மறுக்கப்பட்டு பலாலியில் தடுத்து வைக்கப்பட்டனர். (யோ)

மகாஜனக் கல்லூரியின்
மாபெரும்
இசை நாடக விழா

போர் மேகங்கள் திடீரென எமைச் சூழ்ந்த காரணத்தால் 29-09-93 அன்று நடைபெற இருந்து இடைநிறுத்தப்பட்ட மேற்படி விழா நிகழ்வுகளான

சுண்டிக்குளியூர் 'ராஜன்ஸ்' இசைக்குழுவினர் வழங்கும்

## நாடக கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலை யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறை யாழ் - நாடக, அரங்கக் கல்லூரி என்பவற்றின் ஆதரவுடன் நடாத்தப்படும் நாடகக் கருத்தரங்கும் களப்பயிற்சியும் இன்று முதல் மூன்று தினங்களுக்கு கலாசாலை அரங்கில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் திரு. எஸ். நடராசா தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வு தினமும் காலை 8 30 மணி முதல் மாலை 5-00 மணி வரை நடைபெறவுள்ளது.

## பன்னிருவர் ஞாபகமாக சிரமதானம்

(தொல்புரம்)

இலங்கை, இந்திய அரசினரின் கூட்டுச் சதிக்குப் பலியாகிய பன்னிருவேங்கைகளின் ஞாபகார்த்தமாக சிரமதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன்தினம் பன்னிரு வேங்கைகளுக்கு உணர்வு பூர்வமான அஞ்சலி செலுத்தப்பட்டு, அதனைத்தொடர்ந்து சிரமதானப்பணியொன்றினையும் தொல்புரம் மத்திய சனசமூக நிலையத் தொண்டர்கள் மேற்கொண்டனர். நிலையச் சுற்றாடல் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன இதில் நிலையத் தொண்டர்களுடன், கிராம மக்களும் இணைந்து செயல்பட்டு தியாகிகளை நினைவு கூர்ந்தனர்.

## பரிசுத்தினம்

யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் பரிசுத்தினம் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு இ. மாணிக்கம் தலைமையில் நடைபெறும். [24

## வலிவடக்கு செல்ல செஞ்சிலுவை முயற்சி

(யாழ்ப்பாணம்)

மாதகல், இளவாலை ஆகிய பகுதிகளில் சிக்குண்ட மற்றும் பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களை பார்வையிட அடுத்த கிழமை செல்வதற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் சிறிலங்கா அரசின் பாதுகாப்பு செயற்பாட்டு தலைமையகத்திடம் அனுமதிகோரியுள்ளது.

செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் இக்கிழமை மேற்படி பகுதிகளிற்கு செல்ல இருந்தனர். ஆனால் இக்கிழமை நாட்களில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்தமையினால் அவர்களினால் செல்ல முடியவில்லை.

இதனை அடுத்தே அடுத்த கிழமை அனுமதிக்கும்படி அனுமதி கோரியுள்ளனர் என அவ் வட்டாரங்களில்இருந்து தெரியவருகின்றது. (பா), (நி)

## பன்னிருவர் நினைவாக வீடுகள் அமைப்பு

[சுன்னாகம்]

சுன்னாகம் சிற்றூர் உதவிப்

## 7918 மாணவர்களுக்கு பல்கலையில் அனுமதி

(கொழும்பு)

1992/93 கல்வியாண்டு பல்கலைக் கழக அனுமதிக்கு 7918 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக் கழக மானிய ஆணைக் குழு இம்மாணவர்களைதெரிவு செய்துள்ளது.

கடந்த ஆண்டிலும் இவ் ஆண்டு 184 மாணவர்களுக்கு கூடுதலாக பல்கலைக்கழக அனுமதி கிடைத்துள்ளது. மருந்துவ, பொறியியல், விஞ்ஞான பீடங்களுக்கு கூடுதலானவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மருந்துவபீடத்திற்கு இந்த ஆண்டிற்கான குறைந்தபட்ச அனுமதிதேவைகள் குறைவானதாகும்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை தவிர ஏனைய மருத்துவ பீடங்கள் அனைத்திற்கும் கூடுதல் மாணவர்கள் சேர்க்கப்படுவர் என உயர் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். இம் மருத்துவ பீடங்களில் 828 மாணவர்களுக்கு அனுமதி கிடைக்கும். யாழ்.பல்கலைக்கழகமருத்துவ பீடத்தில் 160 மாணவர்களை அனுமதிக்க வசதிகள் இருப்பினும் 58மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை பெற்றுள்ளனர்.

ஆகக் குறைந்த பட்ச புள்ளிகளை அல்லாது அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையையே பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முடிவு செய்யும் எனவும் உயர் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஒரு தொகுதி மாவை குமாரி ஏற்றி வரும்

(யாழ்ப்பாணம்)

தற்சமயம் யாழ். குடாநாட்டில் நிலவி வரும் மா தட்டுப்பாட்டை போக்க குமாரி கப்பல்மூலம் திருக்கோணமலையில் இருந்து ஒரு தொகுதி மா தருவிக்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்சமயம் பருத்தித்துறை இறங்கு துறையில் பொருள்களை இறக்கிக்கொண்டிருக்கும் இக் கப்பல் பொருள்கள் இறக்கிமுடிந்ததும் திருக்கோணமலைக்குச் சென்று ஒரு தொகுதி மா ஏற்றிவரவுள்ளது. என யாழ். செயலக பதில் அரச அதிபர் தெரிவித்தார்.

இக் கப்பலில் பருத்தித்துறையில் இருந்து ஒரு தொகுதி அரச ஊழியர் திருக்கோணமலை வரை செல்லவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (பா), (நி)

## கச்சாய் அகதிமுகாமில் கொலரா நோயாளிகள்

[தென்மராட்சி]

கச்சாய் கோமார்காடு அகதி முகாமில் இரண்டு வாந்திபேதி நோயாளர் கண்டுபிடிக்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இம் முகாமிற்கு நேரில் சென்று பரிசோதனையைமேற்கொண்ட பொது சுகாதார பரிசோதகர் இவர்கள் இருவரையும் கண்டுபிடித்து வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளார். (86)

## உதை பந்தாட்டம்

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடாத்தும் 7 பேர் கொண்ட உதை பந்தாட்டம் இன்று பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறும். முதல் போட்டியில் சென்நீக்கிலஸ் A அணியை எதிர்த்து அறிவொளி வி க மோதும் இரண்டாவதுபோட்டியில்பாடுமீன்Aஐஎதிர்த்துசென்மேரிஸ்B அணிமோதும்.

## சைவ உணவு

இவ்வாறு கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் அனைவரும் வெளிநாடு செல்வதற்காக கொழும்பில் தங்கியிருந்தவர்கள் எனவும் தெரியவருகிறது.

கொழும்பில் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்த வரும்

## வருடாந்த பொதுக்கூட்டம்

(மல்லாகம்)

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க 40 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் திரு. கு. சிறிபாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்திற்கு அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அதன் செயலாளர் கேட்டுள்ளார்.

## கலந்துரையாடல்

மண்ணெண்ணெய் கொள்வனவு தொடர்பாக சில முக்கிய தீர்மானங்கள் எடுக்க வேண்டி இருப்பதால் அனைத்து பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்குமான கலந்துரையாடல் இன்று முற்பகல் 10-30 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை தலைவர் திரு. வை செந்திநாதன் அவர்கள் தலைமையில் யா. மா. கூ. சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## வடமகுதி

வித்தார்.

வரிவிதிப்பு ஒழுங்கு விதிகள் தொடர்பான பிரேரணைகள் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. இவ்விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே குணவர்த்னா மேற்கண்டவாறு அரசை சாடினார். ''பொதுமக்கள் மீது அரசு வரிச்சுமையை சுமத்துகிறது. வடக்கில் நடக்கும் யுத்தத்திற்காக பொதுமக்கள் அரசுக்கு வரிசெலுத்த வேண்டியுள்ளது'' என்று அவர் குற்றஞ் சாட்டினார்.

நேற்றைய விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மேலும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்களும் போரினால் வரிவிதிப்பு அதிகரித்து வருவதை கண்டித்து உரையாற்றினார்கள்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 06-10-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1111

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-1602, 22-5622, 26-2299, 26-3321, 26-4657

யாழ். போதனா வைத்திய சாலையைச் சேர்ந்த எட்டு வைத்திய அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கொழும்புக்கு சென்றிருந்த இவ் வைத்திய அதிகாரிகள் குழு பலாலி இராணுவ முகாமில் எட்டு தினங்கள் தங்கியிருந்து விட்டு நேற்று 'குமாரி' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்தனர்.

இவர்கள் கடந்த 28ஆம் திகதி பலாலிக்கு வந்த போதிலும் யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்ததினால் யாழ். நோக்கி செல்ல அனுமதி மறுக்கப்பட்டு பலாலியில் தடுத்து வைக்கப்பட்டனர். (யோ)


## மகாஜனக் கல்லூரியின்
## மாபெரும்
# இசை நாடக விழா

போர் மேகங்கள் திடீரென எமைச் சூழ்ந்த காரணத்தால் 29-09-93 அன்று நடைபெற இருந்து இடைநிறுத்தப்பட்ட மேற்படி விழா நிகழ்வுகளான

**சுண்டிக்குளியூர் 'ராஜன்ஸ்' இசைக்குழுவினர் வழங்கும்**

# இசை அமுதர்

**S. G. சாந்தன், V. செல்வம்**

**இணைந்து வழங்கும்**

**அரியாலையூர் கலைமகள் கலையொளி நாடக மன்றத்தின்**

# 'சத்தியவான் சாவித்திரி'

நாடகம்

**ஆகியன இன்று வியாழக்கிழமை (07-10-93) இரவு 7-00 மணிக்கு**

**மகாஜனக் கல்லூரி புதிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.**

உயர்தர மாணவர் மன்றமும்.
இன்ரறக்ட் கழகமும்.

(6231)



யாழ் நகர் சகலதுறை

வர்த்தகர்களுக்கும், ஊழியர்களுக்கும்

யாழ். வர்த்தகர் சங்கம் விடுக்கும்

## ஓர் முக்கிய அறிவித்தல்

நாளை 08-10-93 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு யாழ். நகர் சகலதுறை வர்த்தகர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஓர் முக்கிய கலந்துரையாடல் யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமிமண்டபத்தில் நடைபெறும் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொள்வதால் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து யாழ். நகர் சகலதுறை வர்த்தகர்களும், ஊழியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி, வணக்கம்.

வே. சிற்சபேசன்
தலைவர்

[5956)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


...யோரும் உடனிருந்தனர்.

...தலைமையில்நடைபெறும். [24

# வலிவடக்கு செல்ல செஞ்சிலுவை முயற்சி

(யாழ்ப்பாணம்)

மாதகல், இளவாலை ஆகிய பகுதிகளில் சிக்குண்ட மற்றும் பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களை பார்வையிட அடுத்த கிழமை செல்வதற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் சிறிலங்கா அரசின் பாதுகாப்பு செயற்பாட்டு தலைமையகத்திடம் அனுமதிகோரியுள்ளது.

செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் இக்கிழமை மேற்படி பகுதிகளிற்கு செல்ல இருந்தனர். ஆனால் இக்கிழமை நாட்களில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்தமையினால் அவர்களினால் செல்ல முடியவில்லை.

இதனை அடுத்தே அடுத்த கிழமை அனுமதிக்கும்படி அனுமதி கோரியுள்ளனர் என அவ் வட்டாரங்களில்இருந்து தெரியவருகின்றது. (பா), (நி)

# பன்னிருவர் நினைவாக வீடுகள் அமைப்பு

[சுன்னாகம்]

இந்திய அரசின் வல்லாதிக்க வெறியை அம்பலப்படுத்தி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பன்னிரு வேங்கைகள் நினைவாக, இடம்பெயர்ந்த வீடற்ற மக்களுக்கு, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் சுன்னாகம் கல்லாக் கட்டுவன் பகுதியில் 07வீடுகள் அமைக்கப்பட்டு கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

வலிகாமம் கோட்ட அரசியற் துறையைச் சேர்ந்த திரு. கலைவரதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சுன்னாகம் சிற்றூர் உதவிப் பொறுப்பாளர் திரு. அன்பு மங்கள விளக்கேற்றி வைக்க, யாழ். மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி வீடுகளை உரிமையாளர்களுக்கு வழங்கினார். இந் நிகழ்வில், வலிகாமம் கோட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் திரு. திருக்குமரன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச்சேர்ந்த மணியண்ணா ஆகியோரும் கலந்து கொண்டனர். [11]

## பாடசாலை

வித்தியாதானம் வழங்கும் ஆசிரியர்கள் அனைவரும் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டபோது மாணவ மாணவிகள் அணிவகுத்து நின்று வரவேற்றதுடன் உபசரித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது உலக ஆசிரியர் தினத்தை ஒட்டி தமிழீழத் தேசியத் தலைவரால் விடுத்த வாழ்த்துச் செய்தியும் வாசிக்கப்பட்டது.

## அறிவுச்

கொண்டாட முன்வந்திருப்பதனை மனமாரப்பாராட்டுகிறேன். தமிழீழ ஆசிரிய சமூகம் சிறப்புற்று வாழ எனது நல்வாழ்த்துக்கள்.

அத்துடன், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆசிரியர் வாண்மை விருத்திக் குழு, ஆசிரியர்களின் கற்பித்தல் முறைக்கு ஊக்கங்கொடுத்து உதவுகின்ற நோக்கில் விளக்கு என்ற பெயரில் மாத இதழ் ஒன்றை உலக ஆசிரியர் நாளில் வெளியிடுவதையிட்டும் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த விளக்கு இதழ் கல்விப் போதனைக்கு வெளிச்சம் காட்டி, தொடர்ந்து சிறப்பாக வெளிவர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அடுத்த

சென்ற மாதத்திற்கான ஓய்வூதிய வவுச்சர்களும் ஏற்றப்பட்டுள்ளதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் மேற்படி கப்பல் பருத்தித்துறை நோக்கி நேற்று மாலை வரை புறப்பட்டதாக எமக்கு தகவல் கிடைக்கவில்லை. (பா)

## போராளிகளின்

போராடவேண்டியவர்களாக உள்ளோம். மாணவர்களை கற்பித்து சமுதாயத்தில் ஆரோக்கியமான சந்ததிகளாக அவர்களை உருவாக்குவதும்கூட போராட்டம்தான் மாணவர்கள் கற்கவரும் பாதை ஆபத்தானது. வந்து கற்கும் வகுப்பறை ஆபத்தானது. எம் மாணவர் பல்வேறு நெருக்கடிகள், தடைகளுடனேயே பாடசாலை வருகின்றனர். எனவே அவ்வாறான நெருக்கடி மத்தியில் வரும் மாணவரை புரிந்து கல்வியூட்டுவது என்பது சாதாரண விடயமல்ல.

இன்று நாம் எமது உயிரை கொடுத்து எவ்வளவோ அர்ப்பணிப்புகளை செய்கின்றோம். இதன்விளைவு எதிர்கால சந்ததியின் ஆரோக்கிய வளர்ச்சிதான். எனவே இந்த ஆரோக்கிய வளர்ச்சியை எம் இளம் சந்ததிக்கு ஏற்படுத்தும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களையே சார்ந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

...முகாமில் இரண்டு வாந்தி

## உதை பந்தாட்டம்

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடாத்தும் 7 பேர் கொண்ட உதை பந்தாட்டம் இன்று பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறும். முதல் போட்டியில் சென்நீக்கிலஸ் A அணியை எதிர்த்து அறிவொளி வி.க மோதும் இரண்டாவதுபோட்டியில்பாடுமீன்Aஐஎதிர்த்துசென்மேரிஸ்B அணிமோதும்.

## சைவ உணவு

இவ்வாறு கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் அனைவரும் வெளிநாடு செல்வதற்காக கொழும்பில் தங்கியிருந்தவர்கள் எனவும் தெரியவருகிறது.

கொழும்பில் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தினாலேயே மீண்டும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## பல்கலைக்கழக

தெரிவித்ததாவது, தாய்மொழி தேர்ச்சிக்குரிய நான்காவது பாடத்தில் தமிழ் அல்லது சிங்களமொழி அறிவிற்கு 50 புள்ளிகள் வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## கோட்ட

பொறுப்பாளர், கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் தமிழ்மொழி வாழ்த்தும் ஆசிரியர் கீதமும் இசைக்கப்பட்டதுடன் ''விளக்கு'' சஞ்சிகை அறிமுகவுரையும் இடம்பெற்றன.

மேலும் மாணவர், பழைய மாணவர், பெற்றோர் சார்பில் உரைகளும் விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் உரைகளும் இடம்பெற்றதுடன் மாணவர்களின் பாட்டு, உரைச்சித்திரம், நாடகம், தாளலயம், போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(9, 41, யோ)

## வயோதிப பெண்

வீச்சினால் கொல்லப்பட்டுள்ளார். 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இவர் மேற்படி தாக்குதலால் குடிசைக்குள் இருந்தபோது உயிரிழந்ததாகவும் இராணுவ நடவடிக்கை ஓய்ந்த பின்னர் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இவரது பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் குடியிருப்பிற்குச் சென்ற போதே இப்பெண்மணி குடிசைக்குள் இறந்து கிடந்தது தெரிய வந்ததாகவும் கூறப்படுகின்றது. (22)

கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இம் முகாமிற்கு நேரில் சென்று பரிசோதனையைமேற்கொண்ட பொது சுகாதார பரிசோதகர் இவர்கள் இருவரையும் கண்டுபிடித்து வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளார். (86)

அரசுக்கு வரிசெலுத்த வேண்டியுள்ளது'' என்று அவர் குற்றஞ் சாட்டினார்.

நேற்றைய விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மேலும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்களும் போரினால் வரிவிதிப்பு அதிகரித்து வருவதை கண்டித்து உரையாற்றினார்கள்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 06-10-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1111

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-1602, 22-5622, 26-2299, 26-3321, 26-4657
27-5449, 26-4896, 27-5186, 26-9611, 41-5417.

# மரண அறிவித்தல்கள்

## சுப்ரமணியம் சிவாஜி

சுப்ரமணியம் சிவாஜி அவர்கள் நேற்று 6-10 1993 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சுப்ரமணியத்தினதும், செல்லம்மாவினதும் அன்பு மகனும், திரவியராணியின் அன்புக்கணவரும், றாஜி [மாலா], றாஜ்மோகன் [மோகன்], உஷாயினி, ராஜ்குமார் ஆகியோரின் அன்புத்தந்தையும், அன்னார் இலட்சுமி, தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணரட்ணம், நவரட்ணம், நகுலேஸ்வரன், காலஞ்சென்ற நிர்மலானந்தன், மகேந்திரராஜா, ராஜமலர், சுசீலாதேவி [ஜேர்மனி], குனேந்திரராஜா [ஜேர்மனி], ரவீந்திரன் [பிரான்ஸ்] ஆகியோரின் மைத்துனரும், ராசமணி, ராஜ்மோகன் [ஈழநாத ஊழியர்], பத்மநாதன் [ஜேர்மனி], யோகராணி, சாந்தி ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 7 10-93 [இன்று] பி. ப. 3.00 மணியளவில் தகனக்கிரிகைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சகோதரர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

கட்டுடை,
மானிப்பாய்.

[சி-7560]

## சின்னட்டி இராசா

மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், தற்போது கே. கே. எஸ். வீதி, மல்லாகத்தில் வசித்தவரும் ஆகிய சின்னட்டி இராசா நேற்று காலமானார் அன்னார் உமையாத்தையின் அன்புக் கணவரும், சிவலோகநாதன், சிவநாதன், சிவகுமாரன், சற்குணேஸ்வரி, சறோஜாதேவி, கனகேஸ்வரி, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சவுந்தர்ராஜன், கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதர்சனா, பிரணவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். இறுதிக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு மயூரன் மன்றத்திற்கு அருகாமையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

மயூரன் மன்றம் அருகாமை,
மல்லாகம்.

(6232)